## நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## எஸ்.டி.சி. 226/2019

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.6 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெகநாதன் | வயது | 35 |
| த . பெ . (அ)க . பெ . | கிருஷ்ணன் | தொழில் | உதவி ஆய்வாளர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | குடியாத்தம் | சமயம் | இந்து |
| வட்டம் | வேலூர் | சாதி | |
| மாவட்டம் | வேலூர் | | |

முதல் விசாரணை :

நான் குடியாத்தம் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 27.02.2017 அன்று நான் ஆலங்காயம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் சம்பத் த/பெ சாமகவுண்டர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.52/2017 பிாவுகள் 294 பி, இதச 427 இதச படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு அன்றைய தினமே பகல் 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணி மற்றும் கிருஷ்ணமூா்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தினை பார்வையிட்டு பாா்வை மகசர் மற்றும் மாதிாி வரைபடம் தயாா் செய்தேன். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிாி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சம்பத், நடராஜன் ஆறுமுகம், சுப்பிரமணி கிருஷ்ணமூா்த்தி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 27.02.2017 அன்று பகல் 12.00 மணிக்கு வெள்ளக்குட்டை பேருந்து நிறுத்தம் அருகே வைத்து கைது செய்து நிலையம் சோா்ந்து நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிாிகள் மீது இதச பிாிவுகள் 294 பி,427 ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிாிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு நபாின் இடம் என்றால் சரிதான். எதிாிகள் திட்டியதாக கூறப்பட்டுள்ள நிலையில் அதுகுறித்து அ.சா.1 மனதளவில் பாதிப்படைந்ததாக 3 வது தரப்பினர்கள் யாரும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் ஒரு மரத்தை வெட்டியதாக கூறப்பட்டு ஏற்பட்டதென்றால், சரிதான். அது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதென்றால் சரிதான். அந்த இடம் முருகேசனுக்கு சொந்தமான இடத்தில் உள்ளதாக காண்பிககப்பட்டுள்ளதென்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் கேபிள் குறித்து வரைபடத்தில் காட்டப்படவில்லையென்றால், சரியல்ல. மேற்படி வெட்டப்பட்டதாக கூறப்படும் கேபிளையோ,மரத்துண்டுகளையோ இவ்வழக்கிலி் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சான்று பொருட்கள் இல்லாத சமயத்தில் எதிரிகளை குற்ற செயல்களில் உட்படுத்த முடியாதென்றால் சரியல்ல. மேற்படி மரமோ அல்லது கேபிளோ வாதிகளுக்குதான் சொந்தமானதென்று குறிப்பிட்டு கூற அதற்குண்டான ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தா்ககல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் சாட்சிக்க சாதகப்படுத்த வேண்டி காலதாமதமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இறுதியறிக்கையை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதற்கு காரணம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்தே தயார் செய்து கொண்டோமென்றாலும்சரியல்ல.

மறு விசாரணை= இல்லை.